Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | CC.196/2013 | | |
| Witness for Prosecution | : PW6 | | |
| Name | ராஜ்குமார் | Taluk : | |
| Father's / Husband Name | சோமசுந்தரம் | Calling : | காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| Village | | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 07.06.2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து 2024 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். நான் கடந்த 21.06.2012 ஆம் தேதி மத்தூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருமதி.ராணி க/பெ. வடிவேல் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று மத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் செந்தாமரை என்பவர் மத்தூர் காவல் நிலைய குற்ற எண்.164/2012 சட்ட பிரிவு 392 இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அசல் ஆவணங்களை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும், வழக்கு புலன் விசாரணைக்கு வேண்டி என்னிடம் ஒப்புவித்தார்.

அன்றைய தினமே வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான பிள்ளக்கொட்டாய் சென்று பகல் 01.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராணி, வடிவேலு, மனோகரன், துரைராஜ், கண்ணன் மற்றும் ரவி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் கண்ணன் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை சாட்சிகள் அடையாளம் காட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று மேற்படி சாட்சிகளை தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். ( மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையை **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. )

மேற்படி சம்பவம் உண்மை என்பது தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை பல இடங்களில் தேடி தக்க புலன் வைத்து விசாரணை செய்து வந்த நிலையில் கடந்த 18.10.2012 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தாலுக்கா காவல் நிலையத்தில் காவல் நிலைய குற்ற எண்.612/2012 சட்ட பிரிவு 397 இதசவாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு 18.10.2012 ஆம் தேதி சுமார் காலை 08.00 மணியளவில் சந்தேகத்தின் பேரில் எதிரி திம்மா (எ) திம்மராஜ் என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டபோது எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மத்தூர் காவல் நிலைய குற்ற எண். 164/2012 வழக்கில் சம்மந்தப்பட்டு இருப்பதாகவும், மேற்படி இந்த வழக்கு சொத்தை கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகஜர் மூலமாக வழக்கு சொத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள்.

அந்த சமயத்தில் நான் பணிமாறுதல் பெற்று வேறு ஒரு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டதால் எனக்கு பின்பு காவல் ஆய்வாளர் சண்முகம் அவர்களுக்கு வழக்கை புலன் விசாரணை செய்ய வழக்கு ஆவணங்களை ஒப்புவித்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

இவ்வழக்கை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு எப்பொழுது எனது புலன் விசாரணைக்காக ஒப்புவிக்கப்பட்டது என்றால் அன்றைய தினமே சுமார் ஒரு மணி நேரம் கழித்து என்னிடம் ஒப்புவித்தார்கள். நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பின்னிட்டு எத்தனை மணிக்கு எத்தனை சாட்சிகளை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் அன்றைய தினமே பகல் ஒரு மணி அளவில் சம்பவ இடத்தில் வைத்து 6 சாட்சிகளை விசாரணை செய்தேன். சாட்சிகளை விசாரணை செய்யும் சமயத்தில் என்னுடன் எத்தனை காவல் துறையினர் இருந்தார்கள் என்றால் சரியாக நினைவில்லை. மேற்படி சாட்சிகளின் விசாரணையை யார் பதிவு செய்தார்கள் என்றால் காவல்துறையில் உள்ளவர் தான் பதிவு செய்தார்கள் யார் என்று குறிப்பிட்டு தெரியவில்லை.

நான் சொல்வது போல நான் எந்த புகாரையும் எடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு புலன் விசாரணை செய்திருந்தால் புகார்தாரரை விசாரணை செய்து

இருப்பேன் என்றாலும் சாட்சிகளின் விசாரணையை யார் பதிவு செய்தார்கள் என்பதும் அவர்களை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் எட்டு சாட்சிகளையும் நான்தான் விசாரணை செய்தேன் என்றால் ஆறு சாட்சிகளை விசாரணை செய்தேன். இவ் வழக்கின் கைப்பற்றுதல் மகசாரில் உள்ள சாட்சிகளையும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சிகளையும் நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான் இவ்வழக்கின் சொத்துக்களை தாலுகா காவல்துறையினர்தான் கைப்பற்றினார்கள் சாட்சிகளை அவர்கள் தான் விசாரணை செய்தார்கள். வழக்கு சொத்துக்களை தாலுகா காவல் ஆய்வாளர் கைப்பற்றிய பின்னிட்டு எனக்கு ஒப்படைத்ததாக சொல்லி உள்ள போது அதனை யார் என்னிடம் ஒப்புவித்தார் என்றால் காவல் ஆய்வாளர் மகஜர் மூலமாக வழக்கு சொத்துக்களை என்னிடம் ஒப்புவித்தார்.

எந்த தேதியில் வழக்கு சொத்துக்களை என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் 05.11.2012 ஆம் தேதியில் ஒப்படைக்கப்பட்டது. 05.11.2012–ம் தேதியில் வழக்கு சொத்துக்களை என்னிடம் ஒப்புவிப்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பு உள்ளது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். வழக்கு சொத்தான நகைகளை கிருஷ்ணகிரி தாலுகா காவல் ஆய்வாளர் தான் கைப்பற்றுதல் செய்தார் என்றால் சரிதான்.

மேற்படி கைப்பற்றுதல் மகஜர் கிருஷ்ணகிரி தாலுகா காவல் ஆய்வாளர் என்னிடம் ஒப்புவிக்கும் வரை கைப்பற்றுதல் மகஜர் குறித்தும் வழக்கு சொத்துக்களை குறித்தும் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள கைப்பற்றுதல் மகஜர் கிருஷ்ணகிரி தாலுகா காவல் ஆய்வாளர் என்னிடம் ஒப்பு வைத்ததற்கு முன்னதாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் பணி மாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் தேதி சரியாக நினைவில்லை. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவலரை நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான்.

நான் இவ்வழக்கின் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி தானாக முன்வந்து கிருஷ்ணகிரி தாலுகா காவல் ஆய்வாளர் இடம்

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் தனிப்பட்ட முறையில் எதிரியை விசாரணை செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கின் எதிரிகளை சம்பிரதாய கைது செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை நான் அதற்கு முன்னதாக பணி மாறுதல் பெற்று சென்று விட்டேன். நான் சொல்வது போல எந்த சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் பொய் புகாரினை பெற்று பதிவு செய்யப்பட்ட வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல.

வழக்கு சொத்தைகளை என்னிடம் ஒப்புவித்த கிருஷ்ணகிரி தாலுகா காவல் ஆய்வாளரை இவ்வழக்கில் நாம் விசாரணை செய்தேனா என்றால் செய்யவில்லை, இவ்வழக்கின் இறுதி அறிக்கையை தாக்கல் செய்யும் சமயத்தில் இருந்த ஆய்வாளர் விசாரணை செய்திருக்கலாம். நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் பொய்யான ஆவணங்களை தயார் செய்து எதிரியின் மீது பொய் வழக்காடி அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/-M.Suriyakumar, B.A., LL.B.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli.